**செ. கு. எண்**: 311 **நாள்**:30.08.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 30.8.2012

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், கடம்பாடி கிராமம் கிழக்கு கடற்கரைச் சாலையில் **28.8.2012** அன்று குன்னத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. குட்டி (எ) விஸ்வகேது மற்றும் நத்தம் கிராமத்தைச் சேர்ந்த திரு.தர்மலிங்கம் ஆகிய இருவரும் சென்று கொண்டிருந்த இரு சக்கர வாகனமும், அரசுப் பேருந்தும் மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த இருவரும் பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், எண்ணூர் காட்டுக்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராம கிருஷ்ணன் என்பவரின் மகன் யுவராஜ் என்பவர் **28.8.2012** அன்று எர்ணாவூர் மேம்பாலத்தில் தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது வள்ளலார் நகர் நோக்கி சென்ற அரசு பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், புரசைவாக்கம் பெரம்பூர் வட்டம், பிரிக்லின் சாலை, திடீர் நகரைச் சேர்ந்த திருமதி. சசிகலா என்பவர் **28.8.2012** அன்று புரசைவாக்கம் நெடுஞ்சாலையில் இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, அரசுப் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த திரு.குட்டி(எ)விஸ்வகேது, திரு.தர்மலிங்கம், திரு.யுவராஜ் மற்றும் திருமதி.சசிகலா ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவங்களில் காலமான திரு.குட்டி(எ)விஸ்வகேது, திரு. தர்மலிங்கம், திரு. யுவராஜ் மற்றும் திருமதி. சசிகலா ஆகியோரின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**